# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS.No. 60/2023 நாள்.10.06.2025

## PW 1- தண்டபாணி த/பெ. சின்னப்பாகவுண்டர்

**2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு பணம் வரவேண்டும் என்பதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 03.09.2017இல் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்தேன். ( சாட்சி மேற்படி தேதியை கையில் எழுதிவைத்திருந்ததை பார்த்து சாட்சியம் அளித்தார்). தாவா சொத்து 3000 சதுரஅடி அளவு கொண்டதாகும். 1 முதல் 4 பிரதிவாதிகள்5ஆம் பிரதிவாதிக்கு எந்த தேதியில் கிரயம் செய்து கொடுத்தார்கள் என்றால் 2022 இல் தான் 2018 இல் கிரயம் செய்து கொடுத்ததை பொறுத்து தெரிந்துகொண்டேன். 2ஆம் பிரதிவாதியிடமிருந்து நான் எவ்வளவு தொகை பெற்று கொண்டேன் என்றால் எந்த தொகையும் பெறவில்லை. 1லட்சத்தை நான் பெற்றுகொள்ளவில்லை, மீதம் உள்ள 21,53,000த்தை DD கொடுப்பதாக 1 முதல் 4 பிரதிவாதிகள் சொன்னார்கள். 1 முதல் 4 பிரதிவாதிகள் என்னுடைய அதிகார முகவர் என்பதால் சொத்தை விற்ற பின்பு என்னிடம் கணக்கு ஒப்படைத்து அதற்கான ரசீது பெற்று கொண்டார்களா என்றால் இல்லை. 2ஆம் பிரதிவாதி மற்றும் 1, 3, 4 பிரதிவாதிகள் 5ஆம் பிரதிவாதியிடம் தாவா சொத்தை என்ன விலைக்கு கிரயம் பேசினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. 1, 3, 4 பிரதிவாதிகள் அரசு நிர்ணயம் செய்த வழிகாட்டி மதிப்பீடின் படிதான் 5ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்ததாக 2ஆம் பிரதிவாதியிடம் கூறினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

5ஆம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரய பத்திரத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் எனது அதிகார முகவர்கள் என்ற அடிப்படையில் கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் 1 முதல் 4 பிரதிவாதிக்கு 2017ஆம் வருடம் பதிவு செய்யப்பட்ட அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பொது அதிகார பத்திரம் சொத்தை விற்பனை செய்வதற்காக வழங்கபட்டது என்றால் சரிதான். நான் இந்த வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர், மருத்துவகல்லூரி, தஞ்சாவூர் அவர்களிடம் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரின் சான்று நகல் தான் என்னிடம் காட்டப்படுவது அந்த புகார் **பி..சா.ஆ.1.** அந்த புகாரில் தாவா சொத்திற்கு 81 லட்சம் கிரயத்தொகை பேசி முன்பணமாக 40 லட்சம் பெற்று கொண்டதாக இதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் பணம் நான் பெற்றுகொள்ளவில்லை. வா.சா.ஆ.1இல் கண்ட சொத்திற்கான முழுகிரயத்தொகையும் பெற்று கொண்ட பின்தான் 1 முதல் 4 பிரதிவாதிக்கு நான் அதிகார பத்திரம் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. அந்த சொத்திற்கு கிரயத்தொகையாக ரூ 40 லட்சம் பேசப்பட்டது என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார்களா இல்லையா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் புகாரில் 81

லட்சத்திற்கு பேசி 40 லட்சம் முன்பணம் வாங்கியதாக சொன்ன விபரங்களை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 22,53,000க்கும்தான் அரசு வழிகாட்டி மதிப்பீட்டை போட்டு சொத்தை பதிவு செய்ததால் அதை மட்டும் தான் தெரிவித்துள்ளேன். உண்மையான கிரயத்தொகை பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அரசு வழிகாட்டி தொகை எனக்கு கிடைத்தால் போதும் என்றும் அந்த தொகையும் கிடைக்காததால்தான் அந்த பத்திரத்தை ரத்து செய்யவேண்டும் என்று கோரியுள்ளேன். 22,53,000த்தை ஒரே நபர் பெற்று கொண்டாரா அல்லது நான்கு நபரும் தனிதனியாக பெற்று கொண்டார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1இல் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ரூ 5,38,250 இந்தியன் வங்கி காசோலை மூலம் வழங்கபட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அதுபற்றி எனக்கு தெரியாது.

1, 3, 4 பிரதிவாதிகள் வழக்கறிஞர் வேண்டுகோள்படி மேலும் குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- V.S.குமரேசன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.